

புதுக்கோட்டை மாவட்டம், கற்பக விநாயகா மஹாலில், தமிழ்நாடு மாநில ஊரக (ம) நகர்ப்புர வாழ்வாதார இயக்கத்தின் சார்பில், வாழ்ந்து காட்டுவோம் திட்டத்தின் மூலம் பயனாளிகளுக்கு இணை மானியத்திற்கான காசோலைகளை, சட்டம், நீதிமன்றங்கள், சிறைச்சாலை மற்றும் ஊழல் தடுப்பு சட்டத்துறை அமைச்சர் எஸ்.ரகுபதி, மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.மு.அருணா, தலைமையில் இன்று (09.09.2024) வழங்கினார். உடன் மாநிலங்களவை உறுப்பினர் திரு.எம்.எம்.அப்துல்லா, புதுக்கோட்டை மாநகராட்சி மேயர் திருமதி. திலகவதி செந்தில், புதுக்கோட்டை சட்டமன்ற உறுப்பினர் மரு.வை.முத்துராஜா, முன்னாள் அரசு வழக்கறிஞர் கே.கே.செல்லபாண்டியன் , மாவட்ட ஊராட்சிக் குழுத் தலைவர் திருமதி.ஜெயலட்சுமி தமிழ்செல்வன், மாநகராட்சி துணை மேயர் திரு.எம்.லியாகத் அலி, திட்ட இயக்குநர் (மகளிர் திட்டம்) திருமதி.கே.ஸ்ருதி, வாழ்ந்து காட்டுவோம் திட்ட மாவட்ட செயல் அலுவலர் கே.செல்வம், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அரசு அலுவலர்கள் பலர் உள்ளனர்.



விழுப்புரம் வடக்கு மாவட்டம் திண்டிவனம் சட்டமன்ற தொகுதி திண்டிவனம் நகரதிமுக சார்பில் நடைபெற்ற செயல் வீரர்கள் ஆலோசனை கூட்டத்தில் சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர்கள் நலத்துறை அமைச்சர் செஞ்சி மஸ்தான் சிறப்புரையாற்றினார். உடன் விழுப்புரம் வடக்கு மாவட்ட பொறுப்பாளர் டாக்டர் சேகர், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்கள் டாக்டர் மாசிலாமணி ,சேது நாதன், சீத்தாபதி சொக்கலிங்கம், மாவட்ட பொருளாளர் ரமணன், மாவட்ட துணை செயலாளர் ரவிக்குமார், திண்டிவனம் நகர செயலாளர்ஆசிரியர் கண்ணன் உள்ளிட்ட திமுக நிர்வாகிகள் உள்ளனர்.

### தி.மு.க. பவள விழா - முப்பெரும்விழா புதுக்கோட்டை வடக்கு மாவட்டத்தில்

# கழகத்தினர் அனைவர் வீடுகளிலும் கழகக் கொடியேற்றுவோம்!

## மாவட்டச் செயலாளர் கே.கே.செல்லப்பாண்டியன் வேண்டுகோள்!

புதுக்கோட்டை,செப்.11-

புதுக்கோட்டை வடக்கு மாவட்டக் கழகத்தினருக்கு மாவட்டச் செயலாளர் கே.கே.செல்லப்பாண்டியன் விடுத்துள்ள வேண்டுகோள் வருமாறு:

பேரறிஞர் அண்ணா கண்ட திராவிட முன்னேற்றக் கழகம், தனது 75வது ஆண்டினை பவள விழாவாக கொண்டாட மகிழ்ந்து வருகிறது.

கழகத்தின் பவள விழா ஆண்டில் கழகத்தை தோற்றுவித்த பேரறிஞர் அண்ணா பிறந்த நாளான வருகிற செப்டம்பர் 15 அன்று காலை கழகத்தின் அனைத்து கிளைகளிலும் உள்ள கழக கொடி கம்பங்களை புதுப்பித்து, கழக லட்சிய இரு வண்ண கொடியை கம்பீரமாக ஏற்றிட வேண்டும் என்றும், அத்துடன் கழக தொண்டர்களால் தான் இந்த பேரியக்கம் 75 ஆண்டுகளை கடந்து கம்பீரமாக பீடு நடை போட்டு வருகிறது என்பதை நாட்டு மக்களுக்கு எடுத்துக்காட்டிடும் வகையில், கழகத் தோழர்களின், அனைவரது வீடுகளிலும் கழகக் கொடியை பட்டொளி வீசி பறக்க செய்திட வேண்டும். என்று நம் நெஞ்சமெல்லாம் நிறைந்திருக்கும் தமிழ்நாடு முதல்வர், தலைவர் தளபதி அவர்களின் அன்பு கட்டளைக்கு இணங்க புதுக்கோட்டை வடக்கு மாவட்டத்தில் உள்ள மாநகர, ஒன்றிய, பேரூர், வட்டங்கள், அனைத்து கிளைகளில் உள்ள அனைத்து கொடிக் கம்பங்களையும் வர்ணம் தீட்டி, புதுப்பித்து வருகிற செப்டம்பர் 15 அண்ணா பிறந்தநாள் அன்று காலை 9 மணிக்கெல்லாம் அனைத்து கழக முன்னோடிகளை வைத்து, கழக கொடியை ஏற்றிட வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.



அத்துடன் புதுக்கோட்டை வடக்கு மாவட்டம் முழுவதும் உள்ள மாநில, மாவட்ட கழக நிர்வாகிகள், முன்னாள் , இன்னாள் நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், அனைத்து அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், கழக முன்னோடிகள், செயல் வீரர்கள், உள்ளாட்சி பிரதிநிதிகள், உள்ளிட்ட ஒட்டு மொத்த கழகத்தினர்

அனைத்து கிளைகளிலும் உள்ள கழக கொடிக்கம்பங்களை புதுப்பித்து கழகத்தின் இலட்சிய இருவண்ணக் கொடியை கம்பீரமாக ஏற்றிட வேண்டும் என்றும், அத்துடன் கழகத் தொண்டர்களால் தான் இந்த பேரியக்கம் 75 ஆண்டுகளை கடந்து கம்பீரமாக பீடுநடை போட்டு வருகிறது என்பதை நாட்டு மக்களுக்கு எடுத்துக் காட்டிடும் வகையில்,

கழகத் தோழர்களின் அனைவரின் வீடுகளிலும் கழக கொடியை பட்டொளி வீசி பறக்கச் செய்திட வேண்டும் .

"கட்டுக்கோப்பான தொண்டர்கள் நிறைந்த இயக்கம் தி.மு.க." என்பதை நாட்டு மக்களுக்கு பறைசாற்றிடும் வகையில் கழகத்தினர் அனைவரின் இல்லங்களிலும் கழக கொடியை கம்பீரமாக ஏற்றி, தி.மு. கழக பவள விழாவை கழகத்தினர் குடும்ப விழாவாக கொண்டாடி மகிழ்ந்திட வேண்டும் என்றும் கழகத்தினர் அனைவரையும் இருகரம் கூப்பி கேட்டுக்கொள்கிறேன். இவ்வாறு தனது அறிக்கையில் கூறியுள்ளார்.

### தி.மு.க. பவளவிழா - முப்பெரும் விழா

# சேலம் மத்திய மாவட்டம் முழுவதும் இல்லங்களில் கழகக் கொடி ஏற்றுவீர்!

## மாவட்டச் செயலாளர் இரா.இராஜேந்திரன் எம்.எல்.ஏ. அறிக்கை!

சேலம், செப்.11-

சேலம் மத்திய மாவட்டக் கழகச் செயலாளர் இரா.இராஜேந்திரன் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-

திராவிட இயக்க முன்னோடிகள் நடேசனார், டாக்டர்.டி.எம்.நாயர், சர். பிட்டி.தியாகராயர் போன்ற தலைவர்களின் இலட்சியங்களையும், தொடர்ந்து வந்த தந்தை பெரியாரின் சுயமரியாதை சிந்தனைகளை தமிழ் மண்ணில் பட்டி தொட்டியெங்கும் பரப்பி, கழகத்தை தோற்றுவித்து தமிழ் இனம், தமிழ் மொழி என்கிற திராவிட கொள்கைகளை, உணர்வுகளை ஊட்டி வளர்த்து தமிழர்களின் பாதுகாப்பு இயக்கமாம் இந்த மாபெரும் இயக்கத்தை ஆட்சி அரியணையில் அமர்த்தியவர் பேரறிஞர் அண்ணா அவர்கள். பேரறிஞர் பெருந்தகை அண்ணா அவர்கள் ஆட்சி பொறுப்பேற்று தாய் திருநாட்டிற்கு தமிழ்நாடு பெயர் மாற்றம், இருமொழிக் கொள்கை, சுயமரியாதை திருமணச் சட்டம்



உள்ளிட்ட பல்வேறு சாதனைகளை நிகழ்த்தி காட்டினார்.

இன்றைக்கு தமிழ் இனம் தலை நிமிர்ந்திருக்கிறது என்றால் அதற்கு அடித்தளமிட்டவர் பேரறிஞர் அவர்கள் தான். அத்தகைய ஆற்றலும், திறமையும், பண்பும், கனிவும் கொண்ட பெருந்தகை அண்ணா அவர்களின் பிறந்தநாள் செப்டம்பர் 15ஆம்நாள். ஆம் இந்த நாள் தமிழனுக்கு திருநாள் ஆகும்.

ஒவ்வொரு ஆண்டும் நாம் தந்தை பெரியார் பிறந்த நாள் விழா, பேரறிஞர் அண்ணா பிறந்த நாள் விழா, கழகத்தின் பிறந்த நாள் விழா என முப்பெரும் விழாவாக பொதுக்கூட்டம், கழக முன்னோடிகளுக்கு பொற்கிழி விருதுகள், நலிந்தோருக்கு நலத்திட்டங்கள் என எழுச்சியுடன் கொண்டாடி வருகிறோம்.

அந்த வகையில் 1949 ஆம் ஆண்டு பேரறிஞரால் தோற்றுவிக்கப்பட்டு, தலைவர் கலைஞர் அவர்களால் கட்டிக்காக்கப்பட்டு, பேரறிஞர், முத்தமிழறிஞர் வழியில் தியாகத்தால், உழைப்பால் உயர்ந்த நம் தலைவர் தளபதி அவர்களால் இன்று இந்திய துணைக்கண்டத்திற்கே அரசியல் வழிகாட்டும் கழகம், இந்த 2024 ஆம் ஆண்டு 75 ஆவது ஆண்டினை நிறைவு செய்யும் பவள விழா நிறைவினை கொண்டாடுவது கூடுதல் சிறப்பாகும்.

கழகத் தலைவர் அவர்களின் அவர்களின் ஆணையேற்று கழகத்தின் பவள விழாவையொட்டி நமது மத்திய மாவட்டம் முழுவதும் உள்ள கழக கொடிக் கம்பங்கள் அனைத்தும் புதுப்பிக்கப்பட்டு கழக மூத்த முன்னோடிகளால் கழக இருவண்ணக் கொடியை உயர்த்தி பட்டொளி வீசி பறந்திடச் செய்திடல் வேண்டும் எனவும், நம் அனைவரது இல்லங்கள் அலுவலகங்கள் வணிகவளாகங்களிலும் கழகக்கொடி ஏற்றி எழுச்சியோடு பவள விழாவினை கொண்டாடிட வேண்டும் எனவும் கேட்டுக்கொள்ளப்படுகிறது.

தொடர்ந்து, பேரறிஞரின் பிறந்தநாளான செப்டம்பர் 15 ஆம் நாள் ஞாயிற்றுக்கிழமை காலை 08.30 மணிக்கு சேலம் பழைய பேருந்து நிலையத்தில் உள்ள பேரறிஞர் அண்ணா அவர்களின் சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்திட சேலம் மத்திய மாவட்டக் கழக நிர்வாகிகள், மாநகரக் கழக நிர்வாகிகள், பகுதி கழக, ஒன்றிய கழக, பேரூர் கழக, கோட்டக் கழக செயலாளர்கள் மற்றும் நிர்வாகிகள், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள், அனைத்து அணிகளின் மாவட்ட, மாநகர அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், கழக முன்னோடிகள் அனைவரும் வருகை தந்து இந்நிகழ்ச்சியில் கலந்து கொள்ள வேண்டுமென கேட்டுக் கொள்கிறேன்.

### எம்.அப்துல்மாலிக் வரவேற்புரை!

# செம்பனார்கோயில் தெற்கு ஒன்றிய தி.மு.க. பொது உறுப்பினர்கள் கூட்டம்!

## நிவேதா எம்.முருகன் எம்.எல்.ஏ., சிறப்புரை!

மயிலாடுதுறை. செப்.11-

மயிலாடுதுறை மாவட்டம் செம்பனார்கோயில் தெற்கு ஒன்றிய தி.மு.க. பொது உறுப்பினர்கள் கூட்டம் சங்கரம்பந்தல் இலுப்பூர் ரமாட்டி திருமண மண்டபத்தில் நடைபெற்றது. கூட்டத்திற்கு ஒன்றிய அவைத் தலைவ பாண்டு (எ) என்.ரமகிரஷ்ணன் தலைமை தாங்கினார். மமாநில விவசாய அணி இணைச் செயலாளர் ஆர். அருள்செல்வம், சட்ட மன்ற முன்னாள் உறுப்பினர்கள் ஏ.சி.என்.விஜயபாலன், எம்.எம்.சித்திக், மாவட்ட துணைச் செயலாளர் மு.ஞானவேலன், ஒன்றியக் கழகச் செயலாளர்கள் பி.எம்.அன்பழகன், அமுர்த விஜயகுமார், சட்ட மன்ற முன்னாள் உறுப்பினர் ஏ.சி. என்.விஜயபாலன், தகவல் தொழில் நுட்ப அணி தஞ்சை மண்டல பொறுப்பாளர் பி.எம்.ஸ்ரீதர், பொதுக்குழு உறுப்பினர்கன் நத்தம் ஏ.வின்சென்ட், ஜெ.கபிலன், எஸ்.வெற்றிவேல், அர்ஷத், பேரூர் கழகச் செயலாளர் எஸ். கே.முததுராஜா, ஒன்றியக் குழு தலைவர் நந்தினிஸ்ரீதர், துணைத்தலைவர் பாஸ்கர், ஒன்றிய துணைச் செயலாளர் மாவட்ட ஊராட்சி உறுப்பினர் ரபியாநர்கிஸ் பானு துளசிரேகாரமேஷ், மாவட்ட இளைஞர் அணி துணை அமைர்பாளர் ஜெ.கே.வினோத்பாண்டியன், மாவட்ட தகவல் தொழில் நுட்ப அணி ஒருங்கிளைப்பாளர் கே.விக்னேஷ் ஆகியோர் முன்னிலை வகித்தனர். செம்பனார்கோயில் தெற்கு ஒன்றியக் கழகச் செயலாளர் எம்.அபதுல்மாலிக் வரவேற்றார்.

கூட்டத்தில் மயிலாடுதுறை மாவட்டக் கழகச் செயலாளரும், பூம்புகார் சட்ட மன்ற உறுப்பினருமான நிவேதா எம்.முருகன் சிறப்புரையாற்றினார். மாவட்ட பிரதிநிதிகள் கே.எஸ்.எஸ்.கருணாநிதி, ஈச்சங்குடி க.இளங்கோவன், கே.பி.ராஜா, ஒன்றிய பொரு ளாளர் ஏ.ரெங்கராஜ், துணைச் செயலாளர்கள் கா.இளங்கோவன், எஸ்.சிவக்குமார், செல்லமாள் பன்னீர்செல்வம் மற்றும் சார்பு அணி நிர்வாகிகள், ஒன்றிய குழு உறுப்பினர்கள், ஊராட்சி மன்ற தலைவர்கள், ஊராட்சி மன்ற உறுப்பினர்கள், கிளைக் கழக செயலாளர்கள், நிர்வாகிகள், கழகத்தினர் உள்ளிட்ட ஏராளமானவர்கள் கலந்து கொண்டனர். கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள் 2024 நாடாளுமன்ற தேர்தலில் தி.மு.க. தலைமையிலான இந்தியா கூட்டணி தமிழகத்தில் 40க்கு 40 வெற்றிக் கனி பறித்த கழகத் தலைவர், தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கு வாழ்த்துகளையும், நன்றியையும் தெரிவித்துக் கொள்வதோடு, மயிலாடுதுறை நாடாளுமன்ற தேர்தலில் இந்தியா கூட்டணியின் காங்கிரஸ் கட்சி வேட்பாளர் ஆர்.சுதா வெற்றிக்கு உழைத்திட்ட செம்பனார்கோயில் தெற்கு ஒன்றியக் கழக நிர்வாகிகள், சார்பு அணி நிர்வாகிகள், உள்ளாட்சி அமைப்பு பிரதிநிதிகள், கிளைக் கழக செயலாளர்கள், நிர்வாகிகள் அனைவருக்கும் நன்றியை செம்பனார்கோயில் தெற்கு ஒன்றிய தி.மு.க. சார்பில் தெரிவித்துக் கொள்வது என்றும், மாவட்டக் கழகம் அறிவித்தது போல் செம்பனார்கோயில் தெற்கு ஒன்றியத்தில் முப்பெரும் விழாவை சிறப்பாக கொண்டாடுவது என்றும்,

.சட்ட மன்ற தேர்தலில் 13 முறை நின்று வென்று, 5 முறை தமிழ்நாடு முதலமைச்சராக பொறுப்பு ஏற்று தமிழ்நாட்டு மக்களுக்கு பல்வேறு திட்டங்களை கொண்டு வந்து தமிழக மக்களின் வாழ்வை உயர்த்திட்ட முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டை முன்னிட்டு கலைஞர் உருவம் பொறித்த நாணயத்தை வெளியிட வேண்டும் என்று கழகத்தலைவர், தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களும், தமிழக அரசும் கேட்டுக் கொண்டதற்கு இணங்க கலைஞர் உருவம் பொறித்த 100 ரூபாய் நாணயம் வெளியிட்ட ஒன்றிய அரசுக்கும், கோரிக்கை வைத்த கழகத் தலைவர், தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கும் நன்றி தெரிவித்து செம்பனார்கோயில் தெற்கு ஒன்றிய தி.மு.க. சார்பில் நன்றி தெரிவித்து என்றும், கழகத் தலைவர், தமிழ்நாடு முதலமைச்சர் தளபதி அவர்களின் சீரிய தலைமையில் நடைபெற்று வரும் திராவிட மாடல் ஆட்சியில் மகளிருக்கு மாதம் ரூ. 1,000, மகளிருக்கு பேருந்தில் இலவச விடியல் பயணம்,

புதுமை பெண் திட்டம், நான் முதல்வன் திட்டம், தமிழ் புதல்வன் திட்டம், தொடக்கப்பள்ளி மாணவர்களுக்கு காலை சிற்றுண்டி திட்டம், மக்களுடன் முதல்வர் திட்டம் உள்ளிட்ட எண்ணற்ற திட்டங்களை தமிழ்நாட்டிற்கு தந்து சிறப்பாக ஆட்சி செய்யும் அவர்களின் தலைமையிலான தி.மு.க. ஆட்சி 2026 சட்ட மன்ற தேர்தலிலும் தொடர்ந்திட தலைவர் தளபதி அவர்களின் இலக்கான 200 இடங்கள் என்ற இலக்கை எட்டிடும் வகையில் செம்பனார் கோயில் தெற்கு ஒன்றியத்தில் உள்ள அனைத்து கிளைகளிலும் கழகத்தினர் கழக அரசின் திட்டங்களை பொதுமக்களிடம் எடுத்து கூறும் வகையில் வரும் சட்ட மன்ற தேர்தல் பிரச்சாரத்தை இப்பொழுது இருந்தே தொடங்கிடுவது என்று

சென்னையில் நடைபெற்ற மாவட்டக் செயலாளர் கூட்டத்தில் அறிவிக்கப்பட்டு, மயிலாடுதுறை மாவட்ட பொது உறுப்பினர் கூட்ட தீர்மானத்தின் படி, கழகத்தலைவர் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைக்கிணங்க செம்பனார்கோயில் வடக்கு ஒன்றியத்தில் உள்ள அனைத்து கிளைகளிலும் கிளைக் கழக பொது உறுப்பினர்கள் கூட்டத்தை கூட்ட வேண்டும் என்றும், பொது உறுப்பினர்கள் கூட்ட தீர்மான நோட்டை தலைமைக் கழகத்திற்கு எடுத்து செல்லும் வகையில் ஒன்றியக் கழகம் மூலம் மாவட்டக் கழகத்திடம் ஒப்படைக்க தீர்மான நோட்டை அந்த கிளை செயலாளர்கள், நிர்வாகிகள் ஒன்றிய கழகத்திடம் ஒப்படைக்க வேண்டும் என்றும் தீர்மானம் நிறைவேற்றப் பட்டது.




மயிலாடுதுறை மாவட்டம் செம்பனார்கோயில் தெற்கு ஒன்றிய தி.மு.க. பொது உறுப்பினர்கள் கூட்டம் சங்கரம்பந்தல் இலுப்பூர் ரமாட்டி திருமண மண்டபத்தில் நடைபெற்றது. கூட்டத்தில் மயிலாடுதுறை மாவட்டக் கழகச் செயலாளர் நிவேதா எம்.முருகன் எம்.எல்.ஏ., பேசினார். உடன் சட்ட மன்ற முன்னாள் உறுப்பினர் ஏ.சி.என்.விஜயபாலன், மாவட்டக் கழக துணைச் செயலளார் மு.ஞானவேலன், ஒன்றியச் செயலாளர்கள் எம்.அப்துல்மாலிக், பி.எம்.அன்பழகன், அமிர்தவிஜயகுமார், தகவல் தொழில் நுட்ப அணி தஞ்சை மண்டல பொறுப்பாளர் பி.எம்.ஸ்ரீதர், பொதுக்குழு உறுப்பினர்கள் நத்தம் ஏ.வின்சென்ட், எஸ்.வெற்றிவேல் ஜெ.கபிலன், மற்றும் பலர் உள்ளனர்.

# திண்டிவனம் நகரக் கழகச் செயல் வீரர்கள் கூட்டம்!

## அமைச்சர் செஞ்சி மஸ்தான் சிறப்புரை!

திண்டிவனம் செப். 11-

விழுப்புரம் வடக்கு மாவட்டம் திண்டிவனம் சட்டமன்ற தொகுதி திண்டிவனம் நகர திமுக செயல் வீரர்கள் ஆலோசனைக் கூட்டம் திண்டிவனம் ஹோட்டல் ஆர்யாஸ்சில் நடைபெற்றது.

நகர அவைத் தலைவர் ரவிச்சந்திரன் தலைமை தாங்கினார்.

நகர துணை செயலாளர்கள் தாஜ்தீன், கௌதமன், ரேணுகா அண்ணாமலை, பொருளாளர் ராஜேந்திரன், மாவட்ட பிரதிநிதிகள் ராஜசக்தி, வி. எஸ். முருகன், சின்னதுரை, மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர்கள்டி. கே. பி. ரமேஷ், எம்.டி. பாபு, மாவட்ட வழக்கறிஞர் அணி அமைப்பாளர் கோபிநாத் ,மாவட்ட விளையாட்டு மேம்பாட்டு அணி அமைப்பாளர் சந்திரன், மாவட்ட சுற்றுசூழல் அணி அமைப்பாளர் ராஜா, மாவட்ட அயலக அணி அமைப்பாளர் காதர் நவாஸ், மாவட்ட வர்த்தகர் அணி அமைப்பாளர் விஜயராகவன், மாவட்ட மகளிர் தொண்டர் அணி அமைப்பாளர் சிவகாமி, மாவட்ட தொண்டரணி தலைவர் பிர்லா செல்வம், மாவட்ட வர்த்தக அணி தலைவர் பாஸ்கர் ,மாவட்ட மகளிர் அணி தலைவர் விஜயராமலிங்கம், மாவட்ட நெசவாளர் அணி தலைவர் ரஷித்கான், மாவட்ட மருத்துவ அணி தலைவர் டார்டர் அசோக்குமார், மாவட்ட நெசவாளர் அணி தலைவர் முரளிதரன், மாவட்ட வழக்கறிஞர் துணைத் தலைவர் பிரகாஷ், மாவட்ட சிறுபான்மையினர் அணி தலைவர்

சையத் கவுஸ், மாவட்ட பொறியாளர் அணி தலைவர் சக்தி சரவணன், ஆகியோர் முன்னிலை வகித்தனர் .திண்டிவனம் நகர செயலாளர் ஆசிரியர் கண்ணன் அனைவரையும் வரவேற்றார்.

கூட்டத்தில் விழுப்புரம் வடக்கு மாவட்ட பொறுப்பாளர் டாக்டர் சேகர், சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு தமிழர்கள் நலத்துறை அமைச்சர் செஞ்சி மஸ்தான் ஆகியோர் கலந்து கொண்டு சிறப்புரை ஆற்றினார்.

கூட்டத்தில் கலந்து கொண்ட அமைச்சர் செஞ்சி மஸ்தான் பேசுகையில்ஆட்சி பொறுப்பேற்ற மூன்றாண்டு காலத்தில் தமிழ்நாடு முதலமைச்சர் ஏழை எளிய மக்களுக்கு பல்வேறு திட்டங்களை அறிவித்து செயல்படுத்தி வருகிறார்.

அந்த வகையில் ஒவ்வொரு இல்லத்திலும் திராவிட மாடல் ஆட்சியின் சாதனைகள் உள்ளது இந்த சாதனைகள் வாக்குகளாக மாறி 234 தொகுதிகளிலும் திமுக நிச்சயம் வெற்றி பெறுவது உறுதி அதற்கான முன்னெடுப்புகளை கழக நிர்வாகிகள் அனைவரும் ஒன்று சேர்ந்து செய்ய வேண்டும் என கேட்டுக் கொண்ட அமைச்சர் செஞ்சி மஸ்தான்

செஞ்சி, மயிலம், திண்டிவனம் ஆகிய மூன்று தொகுதிகளில் 100% உதயசூரியன் சின்னம் வெற்றி பெறுவதற்கு தீவிர களப் பணியாற்ற வேண்டும் எனஅவர் தெரிவித்தார்.

கழக முப்பெரும் விழாவை முன்னிட்டு அனைத்து வார்டுகளிலும் கழக இரு வண்ணக் கொடியினை ஏற்றி வைத்து, அனைத்து வார்டுகளிலும் கழக அரசின் சாதனைகளை பிரச்சாரங்களாக மேற்கொள்வது,

செஞ்சி , மயிலம், திண்டிவனம், ஆகிய தொகுதிகளில் முப்பெரும் விழா நடத்தி கழக முன்னோடிகளைகௌரவிப்பது உள்ளிட்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

கூட்டத்தில் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்கள் டாக்டர் மாசிலாமணி, சேது நாதன், மாவட்ட பொருளாளர் ரமணன், மாவட்ட துணை செயலாளர் மரக்காணம் ரவிக்குமார், தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள் சீனிராஜ், கதிரேசன், ஒன்றிய செயலாளர்கள் சொக்கலிங்கம், பழனி, ரவிச்சந்திரன், திண்டிவனம் நகர மன்ற தலைவர் நிர்மலா ரவிச்சந்திரன், நகர மன்ற உறுப்பினர்கள், மாவட்ட அணிகளின் துணை அமைப்பாளர்கள், வார்டு செயலாளர், பிரதிநிதிகள்,அனைத்து திமுக நிர்வாகிகள் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

திண்டிவனம் நகர கழக துணை செயலாளர் கௌதமன் நன்றி கூறினார்.



தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் நல்லாட்சியில், தஞ்சாவூர் மாவட்டம், கும்பகோணம் கோட்டம், கால்நடை பராமரிப்புத்துறை சார்பில், கும்பகோணம் தொகுதி, அண்ணலக்ரஹாரம் ஊராட்சி, மாத்தி அய்யனார் கோவில் அருகில், நடமாடும் கால்நடை மருத்துவ ஊர்தி வழித்தடத்தை, கும்பகோணம் சட்டமன்ற உறுப்பினர் சாக்கோட்டை க.அன்பழகன் தொடங்கி வைத்தார். நிகழ்வில், கும்பகோணம் கிழக்கு ஒன்றிய தி.மு.க. செயலாளர் ஜெ.சுதாகர், கும்பகோணம் கால்நடை பராமரிப்புத்துறை உதவி இயக்குநர் மருத்துவர் ஆர்.கண்ணன், மருத்துவர்கள் கணேஷ்பாபு, சுதா ரோஸ், கார்த்திகேயன், ரகுநாத், யாழினி தேவி, கால்நடை ஆய்வாளர்கள் பிரபாகர், ஜகதீஷ், ஒன்றிய திமுக துணைச் செயலாளர் மா.இராமச்சந்திரன், பகுதி செயலாளர் கேசவன், ஒன்றிய குழு உறுப்பினர் சி.சுதா, ஊராட்சி மன்ற தலைவர் ரா.பிரேமாவதி, துணைத் தலைவர் சங்கர், முன்னாள் ஊராட்சி மன்ற தலைவர் விஸ்வநாதன், திமுக நிர்வாகிகள் சேகர், விமலநாதன், ஆரோக்கியசாமி, பன்னீர்செல்வம், சரவணன் மற்றும் பலர் கலந்து கொண்டனர்.